முருகப்பெருமான் துணை

**மகான் மிருகண்டரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.06.2022, வெள்ளிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட குருவே
ஞானிகள் தமை உலகமெங்கிலும்
வானவர் சக்தி கொண்டு உருவாக்க
வள்ளலாய் வந்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது விடை திங்கள்
இனிமைபட இருபான்திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 20 ம் நாள், 03.06.2022 வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அருளாசி தன்னை
3. தன்னையே மிருகண்டரிஷி யானும்
தாமுரைப்பேன் உலக நலம் பெற
அண்ணலாக அரங்க மகான்
அருளும் தரும வழிகள் தன்னை
4. தன்னையே உலகம் பின்பற்ற
தரணியை எந்த வகை பேரிடரும்
இன்னல்தரா அகல நேரும்
இலகுவாய் இயற்கை சக்தியும்
5. சக்தியும் அரணாக அமைந்து
சகல பாதுகாப்பும் பெருகும்
சக்திமிக்க ஞானிகள் படை
சற்குரு அரங்கன் தயவுக்கு அருளி
6. அருளியே மக்களிடை தெளிவு
ஆன்மீக ஞானவழித் தொடர்பு
அருளாகப் பெருகி உலகினில்
அனைவருக்கும் ஞானவான்கள் ஆகும்
7. ஆகும் வாய்ப்புக் கிட்டி உலகில்
ஆன்மீக ஞானத் தலைமையே
வகைபட உருவாகி எங்கும்
வளர்ச்சி நிலைகள் காண்கும்
8. காண்கவே உலகினில் மாற்றம்
கந்தவேலனின் அவதார பலமாக
உண்மைநிறைந்த சக்தியாக
உயர் ஆசியாக எங்கும் நிரம்பி
9. நிரம்பியே ஞானவான்கள் படை
நிலமதனை ஆளக்கூடும்
வரம்பு மீறா வண்ணம் காப்பு
வந்தடைந்து வாழ்வாதாரம் வழி

10. வழிதனில் சோடை பற்றா
வளமும் நம்பிக்கை பலமுமாகி
அழியாமை உலகோர் அடைவதுடன்
அகிலமே ஆற்றல்மிக்க பூமியாகி

11. ஆகியே உலகமாற்றம் தானும்
அரங்கனால் உயர் அவதாரத்தால்
அகிலம் அனைத்தும் அடைதல்காணும்
அறிவித்த அருளாசி முற்றே

—சுபம்—